ஊ.ஒ.தொ.பள்ளி திருப்புட்குழி-
காஞ்சிபுரம் ஒன்றியம் & மாவட்டம்

# தமிழ் கட்டுரை

## வகுப்பு: 5

ஞா.செல்வகுமார்

இ.நி.ஆசிரியர்

ஊ.ஒ.தொ.பள்ளி

திருப்புட்குழி

காஞ்சிபுரம் ஒன்றியம்.

9943587673

# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு |
|---|---|
| 1 | தமிழ் மொழியின் சிறப்புகள் |
| 2 | மரபுச்சொற்கள் |
| 3 | விண்ணப்பம் எழுதுதல் |
| 4 | அறிவின் சிறப்பு |
| 5 | கலைவாணரின் வாழ்க்கை வரலாறு |
| 6 | கடிதம் எழுதுதல் |
| 7 | அறிந்துகொள்வோம் |
| 8 | தமிழர் திருநாள் |
| 9 | நீரின் முக்கியத்துவம் |
| 10 | பழமொழிகள் |

# தமிழ் மொழியின் சிறப்புகள்

## முன்னுரை:

கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்தமொழி நம் தமிழ் மொழி. அத்தகைய தமிழ் மொழியின் வரலாற்றையும், அதன் சிறப்பினையும் நாம் இப்பகுதியில் காணலாம்.

## பொருளுரை:

தமிழில் 12 உயிரெழுத்துகளும், 18 மெய்யெழுத்துகளும் உள்ளன. ஒவ்வொரு உயிரெழுத்தும் 18 மெய்யெழுத்துகளோடும் சேர்வதால் 216 உயிர்மெய்யெழுத்துகள் பிறக்கின்றன. இவற்றோடு ஆய்த எழுத்தும் சேர்த்து தமிழ் எழுத்துகள் மொத்தம் 247 (உயிரெழுத்துகள் – 12, மெய்யெழுத்துகள் – 18, உயிர்மெய்யெழுத்துகள் – 216, ஆய்த எழுத்து – 1) ஆகும்.

### உயிர் எழுத்துகள்

உயிரெழுத்துக்களில் குறுகிய ஓசையுடைய எழுத்துக்களான அ, இ, உ, எ, ஒ ஆகிய எழுத்துகள் குற்றெழுத்துக்கள் (குறில்) எனவும், நீண்ட ஓசையுடைய எழுத்துக்களான ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஆகிய எழுத்துகள் நெட்டெழுத்துக்கள் (நெடில்) எனவும் வழங்கப்படும்.

குறிலெழுத்துக்கள் ஒவ்வொன்றையும் ஒரு மாத்திரை நேரத்திலும், நெட்டெழுத்துக்கள் ஒவ்வொன்றையும் இரண்டு மாத்திரை நேரத்திலும் ஒலிக்க வேண்டும்.

## மெய் எழுத்துகள்

மெய்யெழுத்துக்களில் வன்மையான ஓசையுடைய எழுத்துகள் வல்லினம் என்றும், மென்மையான ஓசையுடைய எழுத்துகள் மெல்லினம் என்றும், இவை இரண்டிற்கும் இடைப்பட்ட ஓசையுடைய எழுத்துகள் இடையினம் என்றும் வழங்கப்படும்.

வல்லினம்: க் ச் ட் த் ப் ற்

மெல்லினம்: ங் ஞ் ண் ந் ம் ன்

இடையினம்: ய் ர் ல் வ் ழ் ள்

மெய்யெழுத்துக்கள் ஒவ்வொன்றும் அரை மாத்திரை நேரத்தில் ஒலிக்கப்படும்.

## தமிழ் மொழியைப்பற்றி பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் கூறியவை:

தமிழ் எங்கள் உயர்வுக்கு வான் - இன்பத் தமிழ் எங்கள்
அசதிக்கு சுடர் தந்த தேன்!

தீங்கு நேர்ந்திடில் தமிழர்க்கே - இந்தத் தேகம்
இருந்தொரு லாபமுண்டோ?

தமிழுக்கு நிலவென்று பேர் - இன்பத் தமிழ் எங்கள்
சமூகத்தின் விளைவுக்கு நீர்

தமிழ் என்று தோள் தட்டி ஆடு - நல்ல தமிழ் வெல்க
வெல்கவென்றே தினம் பாடு

இனிமைத் தமிழ்மொழி எமது - எமக்கு
இன்பந்தரும்படி வாய்த்த நல் அமுது!

கெடுதல் எங்கே தமிழின் நலம் - அங்கெல்லாம்
தலையிட்டுக் கிளர்ச்சி செய்க!

தனிமைச் சுவையுடைய சொல்லை - எங்கள் தமிழினும்
வேறெங்கும் யாம் கண்டதில்லை!

தமிழ் எங்கள் இளமைக்குப் பால் - இன்பத் தமிழ் நல்ல
புலவர்க்கு வேல்

தமிழ் எங்கள் உயிர் என்பதாலே - வெல்லுந் தரமுண்டு
தமிழர்க்கு இப்புவி மேலே!

தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத் தமிழ் இன்பத்
தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!

எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லையயன்றால்
இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்!

வெங்குருதி தனிற்கமழ்ந்து வீரஞ்செய்கின்ற தமிழ்
எங்கள் மூச்சாம்

இன்பத்தமிழ்க்கல்வி யாவரும் கற்றவர் என்றுரைக்கும்
நிலை எய்திவிட்டால் துன்பங்கள் நீங்கும், சுகம் வரும்
நெஞ்சினில் தூய்மையுண்டாகிடும், வீரம் வரும்!

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று
சங்கே முழங்கு!

தொண்டு செய்வாய் தமிழுக்கு துறை தோறும், துறை
தோறும் துடித்தெழுந்தே!

# மரபுச்சொற்கள்

## முன்னுரை:

நம் முன்னோர்கள் எப்பொருளை எச்சொல்லால் எவ்வாறு வழங்கினார்களோ அப்பொருளை அச்சொல்லால் அவ்வாறே வழங்குவது மரபு ஆகும்.

## பொருளுரை:

மரபுச்சொற்களை ஒலிமரபுச்சொற்கள், இளமைப் பெயர் மரபுச்சொற்கள், வினை மரபுச்சொற்கள், உறுப்புப் பெயர் மரபுச்சொற்கள், இருப்பிட மரபுச்சொற்கள் என வகைப்படுத்தலாம்.

## ஒலிமரபுச்சொற்கள்:

| **பறவைகள் ஒலி மரபு** | **விலங்குகள் ஒலி மரபு** |
|---|---|
| ஆந்தை அலறும் | ஆடு கத்தும் |
| கூகை குழறும் | எருது எக்காளம் மிடும் |
| காகம் கரையும் | எலி கீச்சிடும் |
| மயில் அகவும் | குதிரை கனைக்கும் |
| குயில் கூவும் | குரங்கு அலப்பும் |
| கோழி கொக்கரிக்கும் | சிங்கம் முழங்கும் |
| கிளி பேசும் | நரி ஊளையிடும் |
| புறா குனுகும் | நாய் குரைக்கும் |
| சேவல் கூவும் | புலி உறுமும் |
| வண்டு முரலும் | யானை பிளிறும் |

| வினை மரபுச் சொற்கள் | |
|---|---|
| சோறு உண்டான் | பாய் பின்னினர் |
| முறுக்குத் தின்றான் | ஆடை நெய்தார் |
| பால் பருகினான் | சுவர் எழுப்பினர் |
| தண்ணீர் குடித்தான் | மரம் வெட்டினார் |
| பூ பறித்தாள் | உமி கருக்கினான் |
| மாலை தொடுத்தாள் | வற்றல் வறுத்தான் |
| ஓவியம் புனைந்தார் | மாத்திரை விழுங்கினான் |
| கூடை முடைந்தார் | அம்பு எய்தார் |
| நூல் நூற்றார் | செய்யுள் இயற்றினார் |
| உணவு சமைத்தார் | தயிர் கடைந்தாள் |
| உப்புமாக் கிளறினார் | பால் காய்ச்சினாள் |
| சிற்பம் செதுக்கினார் | கூரை வேய்ந்தார் |

| பறவை - விலங்குகளின் இளமைப் பெயர்கள் | |
|---|---|
| கோழிக் குஞ்சு | நாய்க் குட்டி |
| கிளிக் குஞ்சு | புலிப் பறழ் |
| அணிற் பிள்ளை | சிங்கக் குருளை |

| | |
|---|---|
| கீரிப் பிள்ளை | யானைக் கன்று |
| பசுவின் கன்று | |

**தாவர உறுப்புகளின் மரபுப் பெயர்கள்**

| | |
|---|---|
| வேப்பந்தழை | தாழை மடல் |
| ஆவரங் குழை | முருங்கைக் கீரை |
| நெல் தாள் | தென்னங் கீற்று |
| வாழைத் தண்டு | கம்பந் தட்டு (திட்டை) |
| கீரைத் தண்டு | சோளத் தட்டு (தட்டை) |

**பறவை - விலங்குகளின் இருப்பிடம்**

-

| | |
|---|---|
| கோழிப் பண்ணை | கறையான் புற்று |
| குருவிக் கூடு | ஆட்டுப் பட்டி |
| சிலந்தி வலை | மாட்டுத் தொழுவம் |
| எலி வளை | குதிரைக் கொட்டில் |
| நண்டு வளை | |

# விண்ணப்பம் எழுதுதல்

## விடுப்பு விண்ணப்பம்

அனுப்புநர்

__________________

ஐந்தாம் வகுப்பு

ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி

திருப்புட்குழி

காஞ்சிபுரம் ஒன்றியம்.

பெறுநர்

வகுப்பு ஆசிரியர் அவர்கள்,

ஐந்தாம் வகுப்பு,

ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி

திருப்புட்குழி

காஞ்சிபுரம் ஒன்றியம்.

அம்மா/ஐயா,

வணக்கம். நான் நாளை எங்கள் மாமாவின் ஊரில் நடக்க இருக்கும் கோயில் திருவிழாவிற்கு செல்ல இருப்பதால்( 10-07-2019) அன்று ஒரு நாள் மட்டும் விடுப்பு அளிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நாள்: தங்கள் கீழ்படிதலுள்ள

இடம்:

# அறிவின் சிறப்புகள்

## முன்னுரை

ஒருவன் தன் வாழ்வில் முன்னேற வேண்டுமெனில் அவனுக்கு கல்வி அறிவு என்பது மிகவும் முக்கியமானதாகும். தன்னிடம் எவ்வளவு பொருட்செல்வம் இருந்தாலும் கல்வி அறிவு இல்லை எனில் அது பயனில்லாத செல்வமாகும். அத்தகைய கல்விச்செல்வத்தின் சிறப்புகளை இங்கு காண்போம்.

## பொருளுரை:

### கல்வியின் சிறப்பு:

இன்றைய உலகின் இன்றியமையாத ஒன்றாக திகழ்வது யாதெனில் கல்வியே ஆகும். எந்தவொரு சமூகத்தினரும் இக்கல்வியைக் கற்பதிலிருந்து விலகிச் செல்வது இன்றைய நவீன உலகில் மிகவும் அரிதாக காணப்படுகிறது. ஏனெனில் கல்வியின் சிறப்பை அனைத்து சமூகங்களும் புரிந்துள்ளன. இதனால் தான் இன்று கல்வியானது மனிதனின் அத்தியாவசிய தேவையாக இருக்கிறது.

கல்வியின் சிறப்பு பற்றி கூறும்போது கல்வி கற்றவன் எந்த இடத்திற்க்குச் சென்றாலும் அவன் பிற சமூகத்தால் மதிக்கப் படுகின்றான். இதற்கு காரணம் அவன் கற்ற கல்வியே.

கற்றவனுக்கு தனது நாடும் ஊருமே அல்லாமல் எந்த நாடும் ஊரும் தன்னுடைய ஊராகும். இப்படி கல்வி கற்றவனின் சிறப்பு இருக்க ஒருவன் தான் மரணிக்கும் வரை கல்வி கற்காமல் இருந்து தனது காலத்தை கழிப்பது மிகவும் சிரமமானதாகும். இதனையே திருவள்ளுவர் மிகவும் அழகாக வர்ணித்திருக்கிறார்.

***யாதானும் நாடு ஆமால் ஊர் ஆமால் என் ஒருவன்***

***சாந்துணையும் கல்லாதவாறு* என்று குறிப்பிடுகிறார்.***

ஒருவன் தான் எவ்வளவு கல்வி கற்றாலும் அதனை செயல் வடிவில் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அவன் கற்ற கல்வியின் பயன் அவனுக்கு கிடைக்கும். இல்லாவிடில் அவன் கற்ற கல்வியின் பயன் ஒன்றும் இல்லாமல் போய்விடும். இதனையும் திருவள்ளுவர் தனது திருக்குறளின் கல்வி என்ற அதிகாரத்தின் முதலாவது குறளில் தெளிவாக கூறுகின்றார்.

****கற்க கசடறக் கற்பவை கற்றபின்***

நிற்க அதற்குத் தக* என்று கூறுவதிலிருந்து நாம் விளங்கிக் கொள்ளலாம்.

எண் என்று சொல்லப்படுவதும், எழுத்து என்று சொல்லப்படுவதும் இவை இரண்டினையும் அறிந்தோர் சிறப்பு மிக்க மக்களின் உயிர்களுக்கு கண் என்று சொல்லப்படுவர். இந்த அளவிற்க்கு கல்வியின் சிறப்பு எடுத்துரைக்கப் படுகின்றது.

***கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்து இரண்டு புண்ணுடையர் கல்லாதவர்***

கற்றவரின் சிறப்புப் பற்றி கூறும் போது ஒருவனின் முகத்திலுள்ள கண்ணானது கற்றவருக்குரிய அடையாளம் என்று சொல்லப்படுகிறது. அதே கண் இல்லாதவருக்கு முகத்தில் இரண்டு புண் இருப்பதாக குறிப்பிடப் படுகின்றது. இதன் மூலம் கல்வியின் சிறப்பும் அதனைக் கற்றவனின் சிறப்பும் கூறப்படுகின்றது.

கல்வி உடையவர் எல்லா மக்களிடமும் நன்றாக பழகிக் கொள்வதோடு மட்டுமல்லாமல் அவர்களுடன் சந்தோசமாக சேர்ந்து வாழ்வதையே விரும்புவர். இவர்களை பிரிக்கின்ற போது இனி நாம் எப்போது மீண்டும் சேர்வோம்! என்ற நினைவிலேயே பிரிகின்ற தன்மை கற்றவரிடம் இருக்கும் தன்மையாகும்.

மனிதன் அயுள் முழுவதும் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும். கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன் ஆகின்றான்.

***கல்விக்காக உயிர் கொடுத்தோர் என்றும் மரணிப்பதில்லை***

மேற்கூரிய வாசகத்தை ஆராய்ந்த போது கற்றவனின் சிறப்பை கணலாம். அதாவது இக்கல்விக்காக உயிர் கொடுத்தோர் மரணிப்பதில்லை என்பது கல்வி கற்றவர்

மரணித்து விடுவார் ஆனால் அவர் கற்ற, கற்ப்பித்த கல்வி இந்த உலகம் அழியும் வரை இருந்தே ஆகும்.

இதனையே கல்விக்காக உயிர் கொடுத்தோர் மரணிப்பதில்லை என கூறப்படுகிறது. இதற்க்கு சிறந்த உதாரணம் 1400 வருடங்களுக்கு முன் கற்ப்பித்த புனித இஸ்லாம் மார்க்கம் இன்று வரை நடைமுறைப்படுத்த படுகிறது. இதனைப் போதித்தவர் மரணித்து விட்டார். அவர் கற்ப்பித்தவை இன்றும் நம்மத்தியில் காணப்படுவதை காணலாம்.

***தான் இன்புறுவது உலகின் பிறர்கண்டு***

***காமுருவர் கற்றரிந்தார்.***

ஒருவன் தான் கற்ற கல்வியின் இன்பத்தை உணர்ந்தானாயின் அவன் மீண்டும் கற்பதையே விரும்புவான். இது கல்வியின் பண்பாக கருதப் படுகிறது.

மாந்தர் தம் கற்றனைத்தூரும் அறிவு என்பது வள்ளுவர் கண்ட வாழ்க்கை நெறியாகும். கல்வி மனித அடிப்படை உரிமைகளில் ஒன்று. அறிவியற் கல்வி, சமூக அறிவியற் கல்வி, அழகியல் கல்வி ஆகிய மூன்றும் வாழ்க்கைக்கு அவசியமானவை. ஒருவனுக்கு பெருமையையும் புகழையும் தரக்கூடிய செல்வம் கல்விச் செல்வமே அன்றி வேறில்லை.

கல்வி தொழிலுக்கு வழி காட்டுகிறது. கல்வி என்பது வாழ்க்கை வாழ்வதற்க்காக உதவும் கருவியாகும். அறிவியலும் சமூகமும் வாழ்நாள் முழுவதும் தொடரும் கருவியாகும். வாழ்க்கையின் நோக்கம் என்ன என்பதை இனங்கண்டு அதற்கேற்ப கற்க வேண்டும். வாழ்க்கையை நெறிப் படுத்தவும் மேம் படுத்தவும் கல்வியை பயன் படுத்த வேண்டும்.

கல்வி கற்றவரிடம் ஒழுக்கம் பண்பு நேர்மை நீதி இவைகள் அனைத்தும் ஒருங்கே அமைந்து காணப்படும். எனவே கல்வியானது ஒரு மனிதனின் முக்கிய தேவையாக இருக்கிறது. எந்தவொரு சமூகமும் கல்வி இல்லாமல் இருப்பது இக்காலத்தைப் பொருத்த வரை மிகவும் தாழ்வாகவும் இழிவாகவும் கருதப் படும்.

<u>**முடிவுரை**</u>:

எனவே இவ்வாறு பார்க்கும் போது கல்வியின் முக்கியத்துவத்தை அறிய முடிகின்றது. ஒருவன் கல்வி கற்றால் எவ்வாறு சமூகத்தில் மதிக்கப் படுகின்றான் என்பதை விளங்க முடியும் இவ்வாறு கல்வியை கற்று சமூகத்தில் சிறந்ததோர் குடிமகனாக வாழ கல்வி உதவுகின்றது.

# கலைவாணரின் இளமைப்பருவம்

## முன்னுரை:

பார் போற்றும் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களின் இளமைப் பருவம் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

## பொருளுரை:

இவர் குமர் மாவட்டத்தில் உள்ள ஒழுகினிசேரியில் 1908 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 29ஆம் நாள் பிறந்தார். இவரது தந்தை சுடலைமுத்து, தாயார் இசக்கியம்மாள் ஆவார்.

இளம் வயதில் இவருக்கு கல்வி கற்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. நாடக அரங்குகளில் குளிர்பானம் விற்றார். அவரது குரல் வளமும் பாடும் திறனும் நகைச்சுவை பேச்சு அவரை நடிகராக்கியது. பாடுவது ஆடுவது நடிப்பது எழுதுவது உரையாற்றுவது ஆகிய அத்தனை துறைகளிலும் அவரது சிறப்பு வெளிப்பட்டது.

## முடிவுரை:

பிறரின் மனம் புண்படாமல் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த கலைவாணரை நாமும் பின்பற்றுவோம்.

# <u>கடிதம்</u>

23/410, திருப்புட்குழி

நாள்:_______

அன்புள்ள மாமா,

நீங்கள் அனுப்பிய பிறந்தநாள் பரிசான கைக்கடிகாரத்தைப் பெற்றுக் கொண்டேன். சரியாக பிறந்த நாளின் போது எனக்குக்கிடைத்தது.

இது மிகவும் பயனுள்ள அன்பளிப்பாகும். கடிகாரம் சரியான நேரத்தைக் காட்டிகின்றது. கவனமுடன் இதைப் பயன்படுத்துவேன்.

உங்களுடைய அன்பளிப்பிற்கும் அன்பிற்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி!!!

இப்படிக்கு

<u>உறைமேல் முகவரி.</u>

திரு ஞா.செல்வா,

56, அண்ணாநகர் முதல் தெரு,

பாலுச்செட்டி சத்திரம்,

காஞ்சிபுரம்.

அ.கு.எண்-631551.

# அறிந்து கொள்வோம்....

## உயிரெழுத்தில் ஓரெழுத்து ஒருமொழி:

ஆ - பசு

ஈ - தேனீ

ஊ - தசை

ஏ - அம்பு

ஐ - தலைவன்

ஓ - மகிழ்ச்சி

## தொகைச்சொற்களை விரித்தறிவோம்:

முக்கனி - மா, பலா, வாழை

இருதிணை - உயர்திணை, அஃறிணை

முத்தமிழ் - இயல், இசை, நாடகம்

நாற்றிசை - கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு

ஐந்திலக்கணம் - எழுத்து, சொல், பொருள், யாப்பு,அணி

அறுசுவை - இனிப்பு, துவர்ப்பு, கசப்பு, புளிப்பு, உவர்ப்பு, கார்ப்பு.

# தமிழர் திருநாள்

## முன்னுரை:

தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கைக்கு ஏற்ப ஒவ்வொரு தமிழரும் கொண்டாடும் தமிழர் திருநாளே பொங்கல் திருநாள்.

## பொருளுரை:

பொங்கல் பண்டிகைக்கு முதல்நாள் கொண்டாடப்படுவது போகிப்பண்டிகை. வீட்டை சுத்தம் செய்து வண்ணம் பூசுவர். பழையன கழிதலும், புதியன புகுதலும் போகிப் பண்டிகையின் சிறப்பு ஆகும்.

## பொங்கல் பண்டிகை:

சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் நாளே பொங்கல் பண்டிகை. உழவர்களின் உழைப்பால் விளைந்த பொருட்களான மஞ்சள், இஞ்சி, கரும்பு, வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம் போன்றவற்றைப் படைத்து புதுப்பானையில் பச்சரிசி இட்டு பொங்கலிட்டு பால் பொங்கும் போது ’ பொங்கலோ பொங்கல்’ என மகிழ்ச்சியுடன் ஓசை எழுப்புவர்.

## மாட்டுப்பொங்கல்:

பொங்கலுக்கு மறுநாள் மாட்டுப்பொங்கல் கொண்டாடப்படுகின்றது. மாடுகளுக்கு நன்றி கூறும் வகையில் மாடுகளை குளிப்பாட்டி அலங்கரித்து வழிபடுவதுதான் மாட்டுப்பொங்கல்.

## முடிவுரை:

தமிழர் பண்பாட்டை வெளிப்படுத்துவது பொங்கல் திருநாள் ஆகும். நண்பர்களையும் உறவினர்களையும் உபசரித்தல், உழவுத்தொழிலுக்கு பெருமை சேர்த்தல் போன்ற நற்பண்புகளின் அடையாளமே பொங்கல் பண்டிகையாகும்.

# நீர்

- நீர் நமது அடிப்படைத் தேவைகளுள் இன்றியமையாத்தாகும். இதையே வள்ளுவர் 'நீரின்றி அமையாது உலகு' என்றார். நாம் உயிர்வாழ நீர் அவசியம்.
- தாகத்தை தணிப்பதற்கும், உடைமையையும் உடலையும் தூய்மை செய்வதற்கும் நீர் தேவை.
- உணவு சமைக்க நீர் தேவை. மழை பெய்யாவிட்டால் நீர் நிலைகள் நிரம்பாது.
- நீர் இல்லையெனில் உணவு தானியங்கள் விளையாது. உலகில் புல். பூண்டு தாவரங்கள் மற்றும் உயிரினங்கள் வாழ முடியாது.
- அத்தகைய சிறப்பு மிக்க நீரை பாதுகாத்து சிக்கனமாக பயன்படுத்தி பயன்பெறுவோம்.

# பழமொழிகள்

## முன்னுரை:

பழமொழிகள் ஒரு சமுதாயத்திலே நீண்ட காலமாகப் புழக்கத்தில் இருந்து வரும் அனுபவக் குறிப்புகள் ஆகும். பழமொழிகள் அச் சமுதாயத்தினரின் அனுபவ முதிர்ச்சியையும், அறிவுக் கூர்மையையும் எடுத்து விளக்குவதாக அமைகின்றன. இவை நாட்டுப்புறவியலின் ஒரு கூறாகவும் அமைகின்றன. எடுத்துக்கொண்ட பொருளைச் சுருக்கமாகவும் தெளிவுடனும் சுவையுடனும் பழமொழிகள் விளங்கவைக்கின்றன.

## பொருளுரை:

பழமொழி என்ற சொல் - விளக்கம்

1.பழமையான மொழி - தொன்மையானது (அனுபவ மொழிகள்)

2.பழம் போன்ற மொழி - பழம் போல் இனிமையானது. சுவை உடையது. (இலக்கியச் சுவை)

3.பழம் போல நன்மையளிப்பது (வாழ்க்கையில் நெறிப்படுத்துவது)

4.பழம் போல் நெகிழ்ந்த தன்மை - புரிந்து கொள்ள எளிமையானது.

நம் முன்னோர்கள் கூறிய சில பழமொழிகளை இங்கு காணலாம்

அக்கம்பக்கம் பார்த்துப் பேசு.

அகத்தி ஆயிரம் காய் காய்த்தாலும் புறத்தி புறத்திதான்.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

அகல் வட்டம் பகல் மழை.

அகல இருந்தால் நிகள உறவு, கிட்டவந்தால் முட்டப் பகை.

அகல உழுகிறதை விட ஆழ உழு.

அச்சமில்லாதவன் அம்பலம் ஏறுவான்.

அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது

அசைந்து தின்கிறது யானை, அசையாமல் தின்கிறது வீடு.

அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே வளையுமா?

அடக்கம் உடையார் அறிஞர், அடங்காதவர் கல்லார்.

அடி நாக்கிலே நஞ்சும் நுனி நாக்கில் அமுதமும்

அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வாராது.

அந்தி மழை அழுதாலும் விடாது.

அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்.

அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி.

அருமையற்ற வீட்டில் எருமையும் குடியிருக்காது.